# A Conversation Between PADDY & WEED.

By

**P. JAMES CATECHIST**
**Christ Church**
Jubbalpore. C. P.

# நெல்லுக்கும் களைக்கும் நடந்த சம்பாஷணை.

" Rejoice not against me, O mine enemy: when I fall, I shall arise; when I sit in darkness, the Lord shall be a light unto me" Micah VII 8.

**PALAMCOTTAH:**
Printed at the Church Mission Press.
BY S. ISHWARAMURTHIA PILLAI.

1884.

# நெல்லுக்கும் கவிரக்கும்

## நடந்த

# சம்பாஷணை.

P. ஜேம்ஸ் உபதேசியாரால்

செய்யப்பட்டது.

கிறிஸ்து ஆலயம்.

ஜபல்பூர்.

மத்திய மாகாணம்.

"என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப் படாதே; நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்; நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்குவெளிச்ச மாயிருப்பார். மீகா. 7: 8.

பாளையங்கோட்டை:

சர்ச்சு மிஷன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1884.

# TESTIMONIALS.

---

The Pamphlet entitled "A Conversation between Paddy and Weeds" composed by Mr. P. James catechist of the Church of England (Christ Church, Jubbalpore) has been perused by me. I find the same to be well written & worthy of note, particularly so with the Natives, and am of opinion that it would be judicious to print & circulate the same amongst the educated Natives of India as it would be the means of promoting Christianity. Further I wish to add that it gives me great pleasure in aiding in the work, with a fervent hope that it will terminate successfully.

Jubbalpore,
4th December 1883. } Signed SARAH ELKINS.

---

Mr. P. James catechist of the Church of England has read to me a tract called "A Conversation between Paddy & Weed" which is carefully and ingeniously written by him. If it

is printed and circulated I have no doubt that it would tend to the promotion of Christianity amongst Natives.

Jubbalpore
25th October 1883. } Signed D. A. Burby.

---

Mr. P. James the catechist of Christ Church Jubbalpore brought a pamphlet entitled "A Conversation between Paddy & Weed" which he intends to get printed. He read the same to us and we are of opinion that it is a very instructive one, and would be a great encouragement for the advancement and promotion of Christianity amongst the Natives of this and other parts of India if it was printed.

Signed J. C. M Connell.
" D. Daniels.
" S Daniels.
" Jno. T. Evans.
" Alfred Bonvard.
" J Arpwood.
" J W Bearder.
Jubbalpore, William Davis.
14th November 1883. } " John Marquis.

---

நம்பர். II.

A

# "CONVERSATION BETWEEN PADDY AND WEED."

# நெல்லுக்குங் களைக்கும்

## நடந்த

# சம்பாஷணை.

"தூற்றுக்கூடை அவர் கரத்திலிருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார் என்றான்." மத். 3: 12.

செழிப்புஞ் செல்வமும் பொருந்திய ஓர் தேசத்தில் தனவானுங் கனவானுமாகிய பாரிக்குடித்தனக்காரனொருவர் இருந்தார். இவர் தம்முடைய ஆதீனத்திற்குட்பட்ட காடுஞ் செடியும் முள்ளு மூடலும் மேடுங் கரடுமான பாழ்வனாந்தரமொன்றை வெட்டித் திருத்தி நீரவாசமாக்கி, பர்வதங்களிலிருந்து வருகிற பெரிய நதியை அணைகட்டித் திருப்பி நீர்ப்பாய்ச்சி, அதில் ஆனைக்கொம்பன், மட்டவெள்ளை, சீரகச்சம்பா, சின்ன மணவாரி, சுருணைவாலன், குருவைக்குளையான், வெள்ளரிக்கிராவி, காடைக்குளத்தான், கட்டக்குலைவாழை, கருடச்சம்பா, குப்பைச்சம்பா,

பனைமுகரி, வால்குருவை, ஆவரம்பூச்சம்பா, மிளகுசம்பா, சித்திரக்காலி முதலான பலவித நெற்களை விதைத்து, பண்படுத்தி பாதுகாத்து வந்தார். பயிர்களும் நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாய் வளர்ந்து விளைந்திருந்தது.

நிலச்சுவான் ஓர் தினத்தில் இவ்வயலுக்குப் போய் அவைகளைப் பார்த்து மனச்சந்தோஷத்துடன் அவைகளின் நடுவில் உலாவித் திரியுஞ் சமயத்தில், நெற்பயிர்களுங் களைகளும் ஒன்றோடொன்று வாதாடுகிறதைக் கவனித்தார்.

நெற்பயிர்கள்: நாங்களே எஜமானால் விதைக்கப்பட்டவர்களாயிருக்கிறோம். எங்களுடைய நன்மையை விரும்பியே எஜமான் சகல வேலைப்பாடுகளையும் பொருள் பாராமல் செய்துவருகிறார். அறுக்கப்பட்டபின்பு எங்களை மாத்திரம் களஞ்சியத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பார் என்றன.

களைகளோ: அப்படியல்ல, நாங்கள் தான் எஜமானால் சாகுபடி செய்யப்பட்டவர்களாய் இருக்கிறோம்; எங்கள் மூதாக்கள் காலமுதல் பிதிர்வழியாய் இவ்விடத்தில் உற்பத்தியாயிருக்கிறோம்; நாங்கள் உங்களைப்போல் வித்திலிருந்து மாத்திரமல்ல, எங்கள் மூதாக்களின் வேரிலிருந்து உண்டானவர்களாயிருக்கிறோம். எஜமான் இவ்வயலுக்குச் செய்யும் சகல பிரயத்தனங்களும் எங்களுடைய நன்மையை விரும்பியே செய்யப்பட்டு வருகின்றன. தவிரவும், இப்பொழுது எஜமான் உங்களையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறார், எங்களையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறார். நீங்களும் வயலுக்குள்ளிருக்கிறீர்கள், நாங்களும் வயலுக்குள்ளிருக்கிறோம். உங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிறார், எங்களுக்குந் தண்ணீர் பாய்ச்சுகிறார். உங்களுக்கும் மழை பெய்கிறது, எங்களுக்கும் மழை பெய்கிறது. உங்களுக்கும் வெயில் எறிக்கிறது, எங்களுக்கும் வெயில் எறிக்கிறது.

உங்களுக்குங் காற்று வீசுகிறது, எங்களுக்கும் காற்று வீசுகிறது. நாங்களும் உங்களைப்போலவே பச்சையிலும், பசுமையிலும், குளிர்ச்சியிலும், நிறத்திலும். வளர்த்தியிலும் சரிசமானமுள்ளவர்களாயிருக்கிறோமே; நாங்கள் பிரயோஜனமற்றவர்களாயிருந்தால் இவ்வளவு வேலைப்பாடுகளையும் அவர் வீணாய்ச் செய்யவுமாட்டாரோ என்றன.

நெற்பயிர்கள்: எங்களுடைய எஜமான் பூரண சற்குணமுடையவர், அவர் தீயோர்மேலும் நல்லோர் மேலும் தமது மழையைப் பெய்யப்பண்ணவும், நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் தமது சூரியனை உதிக்கவுஞ் செய்கிறார். அவர் இரக்கமும் தயவும் நீடிய சாந்தமும் மிகுந்த பொறுமையுமுடையவர்தான், என்றாலும் அவர் நிச்சயமாகவே நீதியுமுடையவராய் இருக்கிறார். எங்களுடைய வாழ்வும் உங்களுடைய வாழ்வும் களத்துக்குப் போனால் தெரியும், அப்போதுதான் எஜமானுடைய நீதி விளங்கும் அதுவரையும் நாங்கள் எங்கள் எஜமானுடைய சித்தத்திற்குள் அடங்கி பொறுமையாயிருக்கிறோம், அதுவே எங்கள் பிரதானமான கடமையாயிருக்கிறது என்றன.

களைகள்: அதைக் கண்டதார்? இப்பொழுது கண்டதே காட்சி, கொண்டதே கொள்கை, விளையும் பயிர் முளையில் தெரியாதா? இப்பொழுதில்லாத வாழ்வு இனிமேல் ஏது என்றன.

எஜமானோ இவைகளின் வாக்குவாதங்களையும் சச்சரவுகளையும் கவனித்தும் யாதொன்றும் பேசாமல் அறுப்புக்காலம்வரையும் பொறுமையாயிருந்தார். வயல் விளைந்தவுடனே அறுப்புக்கு ஆட்களைவிட்டு அறுக்கும்படி உத்தரவுசெய்தார். அவர்கள் எஜமானுடைய உத்தரவுப்படி பாரபட்சமில்லாமல் நெல்லையும் புல்லையும் சேர்த்து அறுத்தார்கள்.

களைகள்: நெற்களைப் பார்த்து நீங்களும் அறுக்கப்படுகிறீர்கள், நாங்களும் அறுக்கப்படுகிறோம் நீங்களும் கட்டுகளாகக் கட்டப்பட்டு களத்துக்குக் கொண்டுபோகப்படுகிறீர்கள், நாங்களும் உங்களோடு சேர்ந்து களத்துக்குக் கொண்டுபோகப்படுகிறோம். நாங்களும் போரடிக்கப்படுகிறோம். நீங்களும் போரடிக்கப்படுகிறீர்கள், உங்களுக்கும் எங்களுக்கும் என்ன வித்தியாசமென்றன?

எஜமானோ, தூற்றுக்கூடையை எடுத்து தம்முடைய களத்தை நன்றாய் விளக்கி மணிகளையும் பதரையும் களைகளையும் காற்றில் தூற்றினார். இவ்வளவுகாலமும் வம்பும் வழக்குமாடி பெருமைபாராட்டி வந்த களைகளும் பதர்களுமோ காற்றில் பறந்துவிட்டன. அவைகளைச் சுட்டெரிக்கும்படியாயும் மணிகளையோ தமது களஞ்சியத்தில் சேர்க்கும்படியாயும் உத்தரவுசெய்தார்.

பிரியமானவர்களே! இந்த உவமையில் காட்டப்படுகிற சமுசாரி நம்மை உண்டாக்கிக் காப்பாற்றி வருகிற சர்வவல்லமையும் மகத்துவமும் பொருந்திய கடவுள்தான். நம்முடைய தலைக்கு மேலாகயிருக்கிற பரமண்டலமே அவர் வாசம்பண்ணுகிற செல்வமுஞ் சிங்காரமுமான அரண்மனை. இப்பூலோகமெல்லாம் அவரால் பண்படுத்தப்பட்டு சாகுபடி செய்யப்பட்டிருக்கிற செல்வமுஞ் செழிப்புமுள்ள வயலாயிருக்கிறது. மெய்யான கடவுளைப் பின்பற்றியிருக்கிற உத்தம பக்தர்களாகிய விசுவாசிகள் யாவரும் அவருடைய வயலில் நாட்டப்பட்ட பயிர்களுக்கு ஒப்பானவர்களாயிருக்கிறார்கள். ஆனால் நெல்லுக்குச் சக்களத்தி நேராய் முளைத்தாளே, வாதுக்குச் சக்களத்தி வந்து முளைத்தாளே என்கிற முதியோர் மொழிப்படி தேவனுடைய உத்தம பக்தர்களுக்கு விரோதிகளான குணப்படாதவர்களையும் துன்மார்க்கர்களையும் எக்காலத்திலும் எந்தத் தேசங்களிலும் எந்தக் குடும்பங்களிலும் எந்தப் பட்டணங்களி

லும் எந்தச் சபையிலும் காண்கலாம். இவர்கள் "ஆற்றைக் கெடுக்குமாம் குறுணி" என்றாற்போல தங்களுடைய கெட்ட நடக்கைகளாலும் சம்பாஷணைகளாலும் மாதிரிகளாலும் மற்றவர்களைக் கெடுக்கிறவர்களாயும், பக்திமான்களுக்கு இடைஞ்சலையும் சஞ்சலத்தையும் உண்டாக்குகிறவர்களாயுமிருக்கிறார்கள். இவர்களையும் தேவன் தம்முடைய பிள்ளைகளுடன் இவ்வுலகத்தில் வைத்து பராமரித்து பாரபட்சமில்லாமல் வானத்திலிருந்து மழையையும் செழிப்புள்ள காலங்களையுந் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் இவர்களுடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் ஆதரித்து வருகிறார். தேவன் இவர்களை இவ்விதமாய் ஆதரித்துவருகிற பிரதான நோக்கம். இவர்கள் தங்கள் பழைய துர்ச்சுபாவங்கள் கிரியைகள் நடக்கைகள் யாவையும் வெறுத்துத் தள்ளி, திவ்விய சாயலை அணிந்து, கிறிஸ்துவுக்கு உகந்தவர்களாய் வளர்ந்து, ஆவியின் கனிகளைக் கொடுத்து, பரம களஞ்சியமாகிய மோட்ச ராஜ்யத்தில் சேர்ந்து என்றுஞ் சுகித்திருக்கவே.

அநேகர் இவைகளை யோசிக்காமல், தேவனே களைகளுக்கொப்பான பொல்லாதவர்களை உண்டாக்கிப் போட்டாரென்றும் அவரே பாவத்துக்குக் காரணராயிருக்கிறாரென்றும், ஆதியில் மனிதர்களைப் படைக்கும்போதே அவர்களில் சிலரைப் பாவிகளாகவும், சிலரை நல்லவர்களாகவும் உண்டாக்கிப்போட்டதோடு சகல துர்க்கிரியைகளையும் சகல பொல்லாப்புகளையும் அவர்களே மனதாரச் செய்யும்படி அவர்கள் தலையில் 'விதி எழுதிப்போட்டாரென்றும் சொல்லுகிறார்கள். இது சரியல்ல; தேவன் ஆதியில் மனிதர்களைப் பரிசுத்தமுடையவர்களாகவே படைத்தார். அவர்களைத் தம்முடைய சாயலாகவே படைத்தார். அவர் பரிசுத்தத்துக்குக் காரணரேயொழிய, பாவத்துக்குக் காரணரல்ல; பிசாசானவனே பாவத்துக்குக் காரணமாயிருக்

கிறான். அவனே களைகளுக்கொப்பான பொல்லாதவர்களின் தகப்பனுமிருக்கிறான்.

மனிதர்களுடைய இருதயத்தில் பிசாசானவன் கெட்ட ஆசாபாசங்களாகிய களைகளை விதைக்கிற வகையைக் குறித்து பரம குருவாகிய இயேசுகிறிஸ்து சொன்ன உவமையைக் கேளுங்கள்.

“பரலோக ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது களைகளுங் காணப்பட்டது. வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள். அதற்கு அவன்: சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர், நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா என்றார்கள். அதற்கு அவன்: வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி, முதலாவது களைகளைப் பிடுங்கி அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்களென்பேன் என்று சொன்னான் என்றார்.” மத். 13: 24—32.

“அவருடைய சீஷர் அவரிடத்தில் வந்து: நிலத்தின் களைகளைப்பற்றிய உவமையை எங்களுக்கு வெளிப்படுத்தவேண்டுமென்று கேட்டார்கள். அவர் பிரதியுத்தரமாக: நல்ல விதையை விதைக்கிறவன் மனிதகுமாரன், நிலம் உலகம்; நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர்; களைகள் பொல்

லாங்கனுடைய புத்திரர். அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு; அறுப்பு உலகத்தின் முடிவு; அறுக்கிறவர்கள் தேவ தூதர்கள். ஆதலால் களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறதுபோல, இவ்வுலகத்தின் முடிவில் நடக்கும். மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார், அவர்கள் அவருடைய ராஜ்யத்திலிருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்புமுண்டாயிருக்கும். அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்தில் சூரியனைப்போல் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்.” மத். 13: 36—43.

இதற்கிசைவாக, வீரமாமுனிவர் பாடியிருக்கிறதைக் கேளுங்கள்.

[தேம்பாவணி.]

“ ஆசை ஏராகப்பூட்டி, அறிவழித்துளஞ் செருக்கி,
ஓசையே கலங்கவீக்கி உழுது, பல்புரையே வித்தி, (டி,
மாசையே முதற்பல்வாழ்வின் வளர்பயிர் முகத்தைக் காட்
காசையே உதவாப்பூதிக் கனல்விளை வியற்றும்பேயே.”

இதிலே பிசாசானவன் மனிதருடைய இருதயத்தில் தன்னுடைய பயிராகிய பாவத்தை உண்டாக்கும்படி பல ஆசைகளை ஏராகப்பூட்டி, நல்லறிவை அழித்து, மயங்கின மனதைச் செருக்கி, தன்னை வணங்காதவர்களைக் கெடுப்பேனென்று மனங் கலங்க வீண் ஓசைகளை வளர்த்துக் கூப்பிட்டு உழுது, பாவங்களை விதையாக விதைத்து உலகப் பொருள் இன்பங்களாகிய பல வாழ்வுகளை வளரும் பயிராகக் காட்டுவான். பின்பு ஒருபிடி பசம்புல்லும் உதவாததுபோல, மரணவேளையில் அச்செல்வங்கள் பின்தொடராமல் நரகத்தீயே விளையும் என்பதாகச் சொல்லியிருக்கிறார்.

அப்படியே உங்கள் ஞானிகளில் பேர்போனவர்களில் ஒருவராகிய அகஸ்தியர்: பிசாசானவனுடைய ஆராதனை இவ்வுலகத்திலுண்டான காரணத்தையும், அவ்வாராதனைகளைப் பிரசித்தப்படுத்துகிற நூல்களையும் அவைகளை எழுதினவர்களின் நிலைமையையும் குறித்துப் பாடியிருக்கிறதைக் கேளுங்கள்.

[அகஸ்தியர் ஞானம்]

" அலகைஅது தேவனுக்குச் சரியாய்நின்று
அங்காரந்தானெடுத்து, அகந்தையாலே
நிலைகுலைந்து பாதாளக்குழிக்குள் நின்று,
நித்தியமுமானிடரை மோசம்போக்கி,
பலகலையும் உணர்அறிவை மயக்கித்தங்கள்
பாதாளவீடதிலே புகுங்கச்செய்யும்
நிலையதுவே அறியாமல் போருர் போருர்
நினைத்துப்பார் புலத்தியனே நிசமாய்த்தானே."

" விடுத்தார்கள் சித்தர்பதினெட்டுப் பேர்க்கும்,
வெவ்வேறே குணமுண்டு விதிக்கமாட்டேன்
தொடுத்தான்காண் கொங்கணவன் சொன்னநூருன்
தொகையப்பா மிச்சமடா சோதித்தாக்கால்
எடுப்பாக வைத்தியத்திலையாயிரத்துச் சொச்சம்
என்சொல்வேன் ஞானத்திலையாயிரத்தெட்டு
கடுப்பாகப் பலநூலை யூன்றிப்பார்க்க
கவலையினுல் கட்டிவிட்டான் கலங்கத்தானே."

" கட்டினுனென்சீடன் சுந்தரனேயென்றல்
கலைஞானம் பார்த்திருந்தும் கபடாய்த்தானே
கொட்டினுன்பலநூலை வெளியில்போட்டு,
கோபத்தான் முந்நூலைக் கலைத்துப்போட்டான்,
கட்டியதோர் கொங்கணவன் சொன்னநூருன்
கஞ்சாவின் மயக்கமடாகருதி யேதான்,

எட்டினான் தேரையனும் சொன்னஞானம்
எட்டிலொன்று திட்டமதாயியம்பினானே."

"இன்பமாய் நால்வேதம் வந்தவாறும்
எழுதினார் வேதவியாசா சாத்தன் போல
அனபாகப் பலவிதத்தில் கட்டிப்போட்டார்
அதினாலேமானிடர்கள் கெட்டுப்போனார்
முன்போல சித்தரெல்லாங் கொஞ்சங்கொஞ்சம்
மூடினதைத் திறந்துவிட்டார் முடுகிநானும்
அன்பாகத் திறந்துவிட்டேன் வெளிச்சமாக
அரனாருத்தாரப்படி அறிவித்தேனே."

"தேடுவாய் புலத்தியனே நன்றாய்க்கேளு
திக்கிடங்கைத் தேடாதே தெளிவாய்ச்சொன்னேன்
பாடுவோர் பதினெட்டுப் புராணங்கட்டு
பாரதமுங் கட்டப்பா பரிகாசங்கள்
நாடதனில் பிராமணர்கள் பிழைக்கச்செய்த
நவக்கிரக கட்டப்பா நம்பவேண்டாம்
ஓடுவாரருள் பாதம் பூசைசெய்து
உத்தமனே கண்ணீரால் கழுவுவாயே."

பிரியமானவர்களே! நீங்கள் பின்பற்றியிருக்கிற மார்க்க ஆசாரங்களும், அவைகளைப் பிரசித்தப்படுத்துகிறவர்களும் களைகளுக்கொப்பாயிருப்பதால் அவைகளை அகற்றிவிட்டு, மெய்யான தேவனையும் அவருடைய பரிசுத்த வேதத்தையும் பின்பற்றுங்கள். களைகள் பசுமையிலும் குளிர்ச்சியிலும் நிறத்திலும் வளர்த்தியிலும் எஜமானுடைய பராமரிப்பிலும் பயிர்களுக்கொப்பாயிருந்தாலும் அவைகளின் கனிகளாலும் அறுப்புக்குப்பின்பு அவைகளுக்குக் கிடைக்கும் முடிவினாலும் பெரிய வித்தியாசம் தோன்றுகிறதல்லவா? அப்படிப்போலவே விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் சன்மார்க்கருக்கும் துன்மார்க்கருக்கும்

தருமசாலிகளுக்கும் லோபிகளுக்கும் இவ்வுலகத்தில் அவர்களுடைய குலஆசாரத்திலும் நிறத்திலும் வளர்த்தியிலும் வாழ்விலும் தாழ்விலும் தேவன் பாரபட்சமில்லாமல் செய்துவருகிற வறுமை சிறுமை வியாதி மரணமுதலிய இன்ப துன்பங்களிலும் அத்தனை வித்தியாசந் தோன்றுவிட்டாலும் அவரவருடைய கிரியைகளாலும் மறுமையில் அவர்கள் அடையப்போகிற பலாபலன்களினாலும் வித்தியாசத்தைக் காண்கலாம்.

களைகளுக்கு ஒப்பானவர்களுடைய கிரியைகளைக் கேளுங்கள். "சரீரத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன; விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கமுதலானவைகளே." இக்கனிகள் யாரிடத்தில் காணப்படுகிறதோ அவர்களெல்லாரும் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள். கலா. 5: 19—23 இவர்களே பரமகளஞ்சியமாகிய மோக்ஷத்தில் பங்கை அடைகிறவர்கள். நீங்கள் இந்தப் பாக்கியமான நிலைமையை அடையவேண்டுமானால், தரிசு நிலம்போன்ற உங்கள் இருதயத்தை ஆத்தும சமுசாரியாகிய கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுங்கள். "நீங்கள் நீதிக்கென்று விதை விதையுங்கள். தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுப்புங்கள், உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள், கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியை வருஷிக்கச்செய்யுமட்டும் அவரைத் தேடக் காலமாயிருக்கிறது." ஓசே. 10: 12.

இப்பொழுது தேவனுடைய கிருபையின் காலத்தை அடைந்துவருகிறீர்கள் என்பதை நினைவுகூருங்கள். ஊழியக்காரர்கள் களைகளைப் பிடுங்கிப்போடும்படி எஜமானிடம் உத்தரவுகேட்டபோது, அவர்: வேண்டாம் அறுப்புக் காலம்வரையும் வளரவிடுங்கள் என்று" உத்தரவான அவருடைய நீடிய பொறுமையைக் கவனியுங்கள் "நம்முடைய கர்த்தாவின் நீடிய சாந்தம் இரக்ஷிப்புக்கு ஏதுவாயிருக்கிறதென்பதைச் சிந்தியுங்கள். அவர் எல்லா மனிதரும் இரக்ஷிக்கப்படவுஞ் சத்தியத்தை அறியும் அறிவுக்கு வரவும் சித்தமாயிருக்கிறார். சிதைப்புநாளுக்கென்று வளர்க்கப்படும் கடாக்களைப்போவிராதேயுங்கள். அவர் நீடிய பொறுமையுடன் சொல்லுகிற வசனத்தைக் கேளுங்கள். "காலஞ் சமீபமாயிருக்கிறது; அநியாயஞ் செய்கிறவன் இன்னம் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னம் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னம் நீதிசெய்யட்டும், பரிசுத்தமுள்ளவன் இன்னம் பரிசுத்தமாயிருக்கட்டும்; இதோ சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியையின்படி அவனவனுக்குப் பதில் அளிக்கும்படி என் பலன் என்னுடன் கூடவருகிறது என்கிறார்" வெளி. 22: 11, 12.

திருச்சபையிலுட்பட்டு கிறிஸ்துவின் பட்சத்திலிருக்கிறவர்களே, உங்களுக்குச் சத்துராதிகளால் துன்பமும் பாடும் வருத்தமும் நேரிடும்போது மனச்சோர்வடைந்து "தேவனைச் சேவிப்பது விருதா, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதினாலும் சேனைகளின் கர்த்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினாலும் என்ன பிரயோசனம்? இப்போதும் அகங்காரிகளைப் பாக்கியவான்களென்கிறோம், தீமைசெய்கிறவர்கள் திடப்படுகிறார்கள். அவர்கள் தேவனைப் பரீட்சை பார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்களே என்று சொல்லுகிறீர்கள். ஆனால் கர்த்தருக்குப் பயந்

தவர்களோ ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளுவார்கள். கர்த்தர் கவனித்துக் கேட்பார், கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தை நினைப்பூட்டுகிறவர்களுக்காகவும் ஞாபகப்புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது. என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவைகளாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாக்ஷிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாக்ஷிப்பேன். அப்பொழுது நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும் தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பார்கள்.'' மல்கி. 3: 14—18 என்று சொல்லுகிற வசனத்தைப் பார்த்து தைரியங்கொள்ளுங்கள். குணப்படாதவர்களே! தேவன் தம்முடைய நீதியைத் திடங்கும் காலங்கள் வருமுன்னமே இந்தக் கிருபையின் காலத்தில் குணப்படப் பிரயாசப்படுங்கள். அவருடைய நீதியை இவ்வுலகத்தாருக்கு அடிக்கடி வெளிப்படுத்தியிருக்கிறார். பழைய உலகத்தைச் சலப்பிரளயத்தினாலும் அக்கிரமத்தில் பேர்போன சோதோம் கொமோரா முதலான பட்டணங்களை அக்கினியினாலுங் கந்தகத்தினாலும் அழித்துப் பிற்காலத்தில் அவபக்தியாய் நடப்பவர்களுக்கு எச்சரிப்பாக வைத்திருக்கிறார் என்பதை மறந்துவிடாதேயுங்கள். இப்படிப்பட்ட எச்சரிப்பை முதலாய் அநேகர் கவனியாமல் "தாங்கள் அசைக்கப்படுவதில்லையென்றும் தலைமுறை தலைமுறைதோறும் தீங்கு எங்களை அணுகுவதில்லையென்றும் தங்கள் இருதயத்தில் சொல்லுகிறார்கள்.'' ஆனால் கர்த்தரோ "நீ இவைகளைச் செய்யும்போது நான் மவுனமாயிருந்தேன். உன்னைப்போல நானும் இருப்பேனென்று நினைவுகொண்டாய், ஆனாலும் நான் உன்னைக் கடிந்துகொண்டு

அவைகளை உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாக நிறுத்துவேன். தேவனை மறக்கிறவர்களே, இதைச் சிந்தித்துக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் நான் உங்களைப் பீறிப்போடுவேன், ஒருவரும் உங்களை விடுவிப்பதில்லை'' என்று சொல்லுகிறார். சங். 50: 20, 21, 22.

சிநேகிதர்களே! இவ்வுலக வாழ்வைச் சதமென்றும் மரணத்துக்குப்பின்பு ஒன்றும் சம்பவிக்கமாட்டாதென்றும் நினையாதிருங்கள். வயலிலிருக்குமட்டும் நெல்லுக்குங் களைக்கும் வித்தியாசமில்லை. என்றாலும் அறுப்புக்குப் பின்பு பெரிய வித்தியாசம் காணப்படுகிறதல்லவா? அப்படியே மரணமாகிய அறுப்புக்குப்பின்பு மனிதர்கள் யாவருக்கும் பெரிய வித்தியாசங் காணப்படும். இந்த அறுப்பு யாவருக்கும் வரும். அது நினையாத நேரத்தில் வரும். அது சிறியோரையும், பெரியோரையும், ராஜாக்களையும் குடிகளையும் ஐசுவரியவான்களையும், தரித்திரரையும், நல்லோரையும், பொல்லோரையும் அறுத்துக்கொண்டுபோய்விடும். "யூதாவே, உனக்கு ஒரு அறுப்பு நாள் நியமிக்கப்பட்டிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்.'' ஓசே. 6: 11. இயேசுவை விசுவாசியாதவர்களும், பேர்க்கிறிஸ்தவர்களும் ஆட்டுத் தோலைப் போர்த்துக்கொண்டிருக்கிற ஓநாய்களைப்போலுள்ள மாயக்காரர்களாகிய சகலரும் களைகளுக்கு ஒப்பானவர்களாயிருப்பதால், இவர்கள் தங்கள் மரணமாகிய அறுப்புக்குப்பின்பு நித்திய நரகமாகிய அக்கினிக்கு இரையாவார்கள்.

இந்தப் பயங்கரமாகிய நாளைக்குறித்துக் கர்த்தருடைய வேதஞ் சொல்லுகிறதைக் கேளுங்கள். "இப்பொழுதே கோடரி மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும்.'' மத். 3: 10.

"கர்த்தர் நன்மைசெய்வதுமில்லை, தீமைசெய்வது

மில்லையென்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிறவர்களுமான மனிதரைத் தண்டிப்பேன். அவர்கள் ஆஸ்தி கொள்ளையாகும்; அவர்கள் வீடுகள் பாழாய்ப்போகும்; அவர்கள் வீடுகளைக் கட்டியும் அவைகளில் குடியிருக்கமாட்டார்கள். அவர்கள் திராட்சத்தோட்டங்களை நாட்டியும், அவைகளின் பழரசத்தைக் குடிக்கமாட்டார்கள். கர்த்தருடைய பெரிய நாள் கிட்டியிருக்கிறது; அது மிகவும் சமீபித்திருக்கிறது; கர்த்தருடைய சத்தத்துக்கு பராக்கிரமசாலிமுதலாய் அங்கே மனங் கசந்து அலறுவான். அந்தநாள் உக்கிரத்தின் நாள். அது இக்கட்டும் இடுக்கமுமான நாள். அது மப்பும் மந்தாரமுமான நாள் அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது அரணிப்பான நகரங்களுக்கு விரோதமாகவும், உயரமான கொத்தளங்களுக்கு விரோதமாகவும் எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள். மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால், குருடரைப் போல நடக்கும்படி நான் அவர்களை வருத்தப்படுத்துவேன்; அவர்கள் இரத்தம் புழுதியைப்போல் சொரியப்படும்; அவர்கள் மாம்சம் எருவைப்போல் கிடக்கும். கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் பொன்னும் அவர்களைத் தப்புவிக்கமாட்டாது; அவருடைய எரிச்சலின் அக்கினியால் தேசமெல்லாம் அழியும்; தேசத்தின் குடிகளை எல்லாம் சடுதியில் நிர்மூலம்பண்ணுவார்." செப். 1: 13–18.

கர்த்தருடைய வேதத்தின்மேல் பிரியமாயிருந்தீர்களேயானால், நீங்கள் நீர்வாய்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்திலே தன் கனியைத் தந்து, இலை உதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பீர்கள்; நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கும். இதின் அருமையான போதனைக்கு இணங்காமல் துன்மார்க்கமாய் நடப்பீர்களேயாகில் "காற்றுப் பறக்கடிக்கும் பதரைப்போல் இருப்பீர்கள்."

அயோத்தியாபுரியின் அரசனாகிய இராமரிடத்தில் அவருடைய தம்பி இலட்சுமணர் அநியாயக்காரருக்கு வருந் தீர்ப்பைப்பற்றிக் கேட்கிற கேள்வியையும் அதற்கு அவர் சொல்லும் உத்தரவையும் பாருங்கள்,

“ ஆரம்பூண்ட மணிமார்பா
அயோத்திக்கரசே அண்ணா கேள்
ஈரமிருக்க மரமிருக்க
இலைகளுதிர்ந்த வாறேது
வாரம் பேசி வழக்குரைத்து
மண்மேல்நின்று வலி பேசி
ஓரஞ்சொன்ன குடியதுபோல்
உதிர்ந்து கிடக்கும் தம்பியரே.”

மரித்தவர்களெல்லாருஞ் சுவர்க்கலோகஞ் சேருகிறார்களென்று நினைக்கிறவர்களே! நீங்கள் சமுசாரியின் களத்திற்குப்போய் அவன் செய்கிறதைக் கவனித்துப் பாருங்கள். அவன் களைகளையும் பதரையுங் களஞ்சியத்தில் சேர்த்து வைக்காமல் அவைகளைச் சுட்டெரித்துப்போட்டு, நல்ல மணிகளை மாத்திரமல்லவோ அங்கே கொண்டுபோய்ச் சேர்க்கிறான். அதுபோலவே, பரம சமுசாரியாகிய கிறிஸ்துவும் அவிசுவாசிகளையும், அருவருப்பானவர்களையும், கொலைபாதகர்களையும், விபசாரக்காரர்களையும், சூனியக்காரர்களையும், விக்கிரக ஆராதனைக்காரர்களையும், பொய்யர் அனைவரையும், தமது பரிசுத்த களஞ்சியமாகிய மோட்ச ராஜ்யத்தில் சேர்க்காமல், அவர்களை இரண்டாம் மரணமாகிய அக்கினியுங் கந்தகமும் எரிகிற கடலிலே தள்ளிப்போட்டு, தமது திருஇரத்தத்தினால் மீட்டுக்கொள்ளப்பட்ட மெய்விசுவாசிகளாகிய உத்தமர்களை மாத்திரம் சேர்த்துக்கொள்ளுவார். “சுன்னத்தில்லாதவனும் அசுத்தனும் இனி உனக்குள் வருவதில்லை, அந்நாள்முதற்கொண்டு சே

னைகளின் கர்த்தரின் வீட்டிலே ஒரு கானானியனும் இருப்பதில்லை, உன்னுடைய ஜனமெல்லாம் நீதிமான்களாயிருப்பார்கள்.'' ஏசா. 52: 1. 60: 21. சகரி. 14: 21.

காரியம் இப்படியிருப்பதால் பிரிய சிநேகிதரே! தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கிற இந்தக் கிருபையின் காலத்தில் தானே குணப்படுங்கள். உங்கள் இருதயமாகிய தரிசு நிலத்தை ஆத்தும சமுசாரியாகிய கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுங்கள். அவர் பரிசுத்தாவியாகிய மழையை அதில் பெய்யும்படி செய்து, நீதியின் விதைகளை விதைப்பார். அவருடைய பண்ணையாட்களாகிய போதகன்மார், உபதேசிமார் உங்கள் இருதயமாகிய தரிசு நிலத்தை உழுகிறவர்களும், ஏர்ப்பூட்டுகிறவர்களும், பரம்படிக்கிறவர்களும், நாட்டுகிறவர்களும், நீர்ப்பாய்ச்சுகிறவர்களுமாயிருப்பார்கள். கர்த்தர் ஒருவரோ வளர்க்கிறவராயிருப்பார். அப்பொழுது நீங்கள் அவருக்கு உகந்த அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியசாந்தம், தயவு, நற்குணம், விசுவாசம், இச்சையடக்கமுதலிய ஆவியின் கனிகளைக் கொடுக்கிறவர்களாயிருப்பீர்கள். உங்கள் மரணமாகிய அறுப்பு அவருடைய பார்வையில் அருமையாக எண்ணப்படும். மறுமையாகிய பரம களஞ்சியத்தில் தேவனுடைய பிள்ளைகளோடு சேர்க்கப்பட்டு சூரியனைப்போல பிரகாசிப்பீர்கள். வெளி. 7: 15—17.

பிதாக்குமாரன் பரிசுத்தாவியாகிய திரியேக தேவன் தாமே உங்களுக்கு வேண்டிய நல்லறிவைக் கட்டளையிடுவாராக. ஆமென்.

முற்றிற்று.